RC - 130

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| **Name of the Test:** | Departmental Test for Officers of the Probation Branch of the Jail Department - Part - I Section - A (Indian Penal Code) (Without Books) | 127 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour

Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display the remaining time as **Time Left**. At the beginning of exam, timer will show

1. Entering into a property in the possession of another with intention to commit an offence is
குற்றம் புரியும் நோக்கத்தோடு பிறரது சொத்தினுள் பிரவேசித்தல் ———— ஆகும்.

(A) intrude
ஊடுருவுதல்

(B) interrupt
இடை மறித்தல்

(C) criminal trespass
குற்றமுறு அத்துமீறல்

(D) interference
குறுக்கிடுதல்

2. Which act, among the following, comes under extortion?
கீழ்க்கண்டவற்றுள் எந்தச் செயல் அச்சுறுத்திப் பறித்தல் என்ற வகையைச் சார்ந்தது?

(A) stealing in a house
ஒரு வீட்டில் திருட்டு

(B) putting any person in fear intentionally
உள் நோக்கத்துடன் ஒருவரை பயப்படுத்துதல்

(C) giving false statement
பொய்யான வாக்குமூலம் அளித்தல்

(D) pilfering in workplace
வேலை செய்யுமிடத்தில் சிறு களவாடுதல்

3. Which, among the following punishments, shall be imposed on a thug?
ஒரு கொள்ளைக்காரனுக்கு பின்வரும் தண்டனைகளில் எந்த தண்டனை விதிக்கப்படலாம்?

(A) death sentence
மரண தண்டனை

(B) imprisonment upto 10 years
பத்து ஆண்டு சிறை வாசம்

(C) imprisonment for life
ஆயுள் கால சிறைவாசம்

(D) imprisonment for life and also liable for fine
ஆயுள் கால சிறைவாசத்துடன் அபராதமும்

4. Committing a public nuisance, in cases not otherwise punishable by IPC, shall be punished with fine upto

இந்திய தண்டனைச் சட்டத்தின்படி வேறு வகையில் தண்டிக்கப்படக் கூடியதல்லாத பொதுத் தொல்லை புரிவதற்கு ———— வரை அபராதம் தண்டனையாக விதிக்கப்படலாம்.

(A) Rs. 500/-
ரூ. 500/-

(B) Rs. 1000/-
ரூ. 1000/-

(C) Rs. 200/-
ரூ. 200/-

(D) Rs. 750/-
ரூ. 750/-

5. Punishment for gratification under pretence to recover any stolen property is described in Section ———— of IPC.

திருட்டுச் சொத்தை மீட்க உதவுவதாகப் பாசாங்கு செய்து அதற்கு அன்பளிப்பு பெறுவதற்கான தண்டனை இ.த.ச. பிரிவு ————ல் கூறப்பட்டுள்ளது.

(A) 245

(B) 235

(C) 225

(D) 215

6. Public servant unlawfully engaging in trade is liable for punishment with

சட்ட விரோதமாக வணிகத்தில் ஈடுபடும் பொது ஊழியருக்கு பின்வரும் தண்டனை விதிக்கப்படலாம்.

(A) simple imprisonment upto one year
ஓராண்டு வரை மெய்க்காவல்

(B) fine
அபராதம்

(C) simple imprisonment upto one year and fine
ஓராண்டு வரை மெய்க்காவல் மற்றும் அபராதம்

(D) any of the above
மேற்கூறப்பட்டவற்றில் ஏதேனும்

7. The act of an intoxicated person, incapable of knowing the nature of such act, is not an offence - while such intoxication was given to him
தனது செயலின் தன்மை அறிய இயலாத நிலையில் போதையிலுள்ள ஒருவரது செயல், அத்தகைய போதை ———— நிலையில் கொடுக்கப்பட்டு இருப்பின் குற்றமற்ற.

(A) without his knowledge or against his will
அவரது விருப்பத்திற்கு மாறான அல்லது அவர் அறியாத

(B) with his knowledge
அவர் அறிந்த

(C) against his will
அவரது விருப்பத்திற்கு மாறான

(D) without his knowledge
அவர் அறியாத

8. Wherever the word "year" or "month" is used, it is to be understood as reckoned according to the ———— Calendar.
ஆண்டு (அ) மாதம் ஆகிய சொற்கள் எங்கு பயன்படுத்தப்படினும் ———— நாட்காட்டியில் உள்ளவாறு கணக்கிடப்பட்டதாகவே பொருள் கொள்ள வேண்டும்.

(A) Indian National
இந்திய தேசிய

(B) British
பிரிட்டிஷ்

(C) Gregorian
கிரிகோரியன்

(D) Hindu
இந்து

9. Cheating by personation is defined as offence, when the individual personated is a ———— person.
பிறரைப் போன்று பாசாங்கு செய்து ஏமாற்றும் குற்றங்களில், ———— நடித்து வஞ்சிப்பது ஆள் மாறாட்டம் செய்து ஏமாற்றுதல் எனக் கொள்ளப்படும்.

(A) Deceased
இறந்தவரைப் போல

(B) imagination
கற்பனையான நபரைப் போல

(C) real
உண்மையான நபரைப் போல

(D) any of the above
மேற்கூறப்பட்டவற்றில் ஏதேனும்

10. A finds a ring lying on the highroad, not in the possession of any person, A, by taking it, commits no ———— though he may commit criminal misappropriation of property.

ஒரு நெடுஞ்சாலையில், எவரது வசத்திலும் இல்லாத ஒரு மோதிரத்தை, A என்பவர் பார்க்கிறார். A அதை எடுப்பதால் அவர் ஒரு குற்றமுறு கையாடலைச் செய்தவராக இருப்பினும் ———— குற்றத்தை செய்தவராக மாட்டார்.

(A) dacoity
வழிப்பறி

(B) extortion
மிரட்டிப் பறித்தல்

(C) robbery
கொள்ளை

(D) theft
திருட்டு

11. The punishment for those who defames another is defined in Section ———— of IPC.

பிறரை அவதூறு செய்யும் எவரொருவருக்கும் விதிக்கப்பட வேண்டிய தண்டனை இ.த.ச. பிரிவு
————ல் வரையறுக்கப்பட்டுள்ளது.

(A) 200

(B) 300

(C) 400

(D) 500

12. Adulteration of food or drink intended for sale shall be punished with

விற்பனை செய்யக் கருதியுள்ள உணவு அல்லது பானம் போன்றவற்றில் கலப்படம் செய்வதற்கு பின்வரும் தண்டனை விதிக்கப்படலாம்.

(A) imprisonment upto six months
ஆறு மாதங்கள் வரை சிறைவாசம்

(B) fine upto Rs. 1,000/-
ரூ. 1,000/- வரை அபராதம்

(C) imprisonment upto six months and fine upto Rs. 1,000/-
ஆறு மாதங்கள் வரை சிறைவாசம் அல்லது ரூ. 1,000/- வரை அபராதம்

(D) any of the above
மேற்கூறப்பட்டவற்றில் ஏதேனும்

13. Corrupt use or attempt to use of any false certificate as a true certificate is punishable with
நேர்மையற்ற முறையில், பொய்யான சான்றிதழை உண்மையான சான்றிதழ் போலப் பயன்படுத்தும் அல்லது பயன்படுத்த முயலும் எவருக்கும், ———— தண்டனை வழங்கப்படலாம்.

(A) simple imprisonment
மெய்க்காவல்

(B) fine
அபராதம்

(C) simple imprisonment and fine
மெய்க் காவல் மற்றும் அபராதம்

(D) in the same manner as if he gives false evidence
பொய் சாட்சி அளித்தமைக்குரியவாறே

14. The punishment for harbouring persons hired for an unlawful assembly is described in Section ———— of IPC.
சட்டவிரோதமான கூட்டத்திற்கென கூலிக்கு பணியமர்த்தப்படும் நபர்களுக்கு புகலிடம் அளிப்பது இ.த.ச. பிரிவு எண் ———— ன்படி தண்டனைக்குரியதாகும்.

(A) 247
(B) 317
(C) 157
(D) 187

15. Act likely to cause harm, but done without any criminal intention, and to prevent other harm is
தீங்கு விளைவிக்க வேண்டுமென்ற குற்ற நோக்கமின்றி, மற்றொரு தீங்கைத் தடுக்க மேற்கொள்ளப்படும் செயலால் தீங்கு ஏற்படின், அது

(A) not an offence
குற்றமல்ல

(B) misdemeanor
தகாத செயல்

(C) an offence
குற்றம்

(D) a violation
விதி மீறல்

16. A finds a valuable ring, not knowing to whom it belongs. A sells it immediately without attempting to discover the owner. A is guilty of ———— under section 403 of IPC.

A என்பவர் ஒரு விலை மதிப்பான மோதிரத்தை - உரிமையாளர் யாரென்று அறியாதது - எடுக்கிறார். மோதிரத்தின் உரிமையாளர் யாரென்று கண்டறிய முயற்சி செய்யாது A அதை உடனே விற்று விடுகிறார். A-ன் இச்செயல் இ.த.ச. பிரிவு 403-ன் படி ———— ஆகும்.

(A) negligence
கவனக் குறைவு

(B) dereliction of duty
கடமை தவறிய செயல்

(C) fault
தவறு

(D) an offence
குற்றம்

17. Unlawful compulsory labour - against will is liable for the punishment of

சட்டத்திற்கு புறம்பாக கட்டாயப்படுத்தி வேலை வாங்குதல் ———— தண்டனைக்கு உட்பட்டது.

(A) imprisonment upto to one year
ஓராண்டு வரை சிறைவாசம்

(B) fine
அபராதம்

(C) imprisonment upto to one year and fine
ஓராண்டு வரை சிறைவாசம் மற்றும் அபராதம்

(D) any of the above
மேற்கண்டவற்றில் ஏதேனும்

18. The offence of attempting to commit suicide is dealt with in Section ———— of IPC.

தற்கொலை செய்துகொள்ள முயற்சிக்கும் குற்றம் குறித்து இ.த.ச பிரிவு ————ல் விவரிக்கப்பட்டுள்ளது.

(A) 319

(B) 428

(C) 309

(D) 348

19. State which of the fraudulent use is punishable
கீழ்கண்ட மோசடிச் செயல்களுள் எது தண்டனைக்குரியது ?

(A) false instrument for weighing
எடையிட போலி கருவி பயன்படுத்துதல்

(B) false weight or measure
போலி எடைக் கற்கள் அல்லது அளவை பயன்படுத்துதல்

(C) intentional possession of false weight or measure
உள் நோக்குடன் போலி எடைக் கற்கள் அல்லது அளவைகள் வைத்திருத்தல்

(D) all of the above
மேற்கூறப்பட்டவை அனைத்தும்

20. Abstaining an order promulgated by a public servant who is Lawfully empowered to promulgate such order, is described as
சட்டப்படி ஒரு ஆணை பிறப்பிக்க அதிகாரம் பெற்றவரால் இடப்படும் ஆணையை நிறைவேற்றாதது ———— ஆகும்.

(A) Disobedience
கீழ்ப்படியாமை

(B) Non-Compliance
உடன் படாமை

(C) Dereliction
அலட்சியம் செய்தல்

(D) Negligence
கவனக் குறைவு

21. Joining unlawful assembly armed with weapon is liable for punishment according to Section ———— of IPC.
சட்ட விரோதமான கூட்டத்தில் ஆயுதம் ஏந்தியவாறு கூடுதல் இ.த.ச. பிரிவு எண் ———— ன்படி தண்டனைக்குரியதாகும்.

(A) 444

(B) 344

(C) 244

(D) 144

22. The word "death" denotes the death of a/an
"மரணம்" என்னும் சொல் ————ன் இறப்பைக் குறிக்கும்.

(A) Human being
மனித இனம்

(B) Human being unless the contrary appears from the context
மனித இனம், வேறு வகையான விளக்கம் தரப்பட்டலான்றி

(C) Human being or animal
மனித இனம் அல்லது விலங்கு

(D) Animal
விலங்கு

23. An effect caused "voluntarily" means the person concerned caused it
"தன்னிச்சையாக" ஒரு விளைவு ஏற்படுத்தப்பட்டது எனில் செயல்பட்டவரால் அச்செயல் ———— ஏற்படுத்தப்பட்டது.

(A) commonly
பொதுவாக

(B) casually
சாதாரணமாக

(C) intentionally
உள் நோக்கத்துடன்

(D) spontaneously
திட்டமிடப்படாது திடீரென

24. Offence of dishonest misappropriation of property shall be punished with
நேர்மையற்ற முறையில் சொத்தைக் கையாடல் செய்யும் குற்றத்திற்கு ———— தண்டனை வழங்கப்படவேண்டும்.

(A) imprisonment upto to two years
இரு ஆண்டுகள் வரை சிறைவாசம்

(B) imprisonment upto to two years and fine
இரு ஆண்டுகள் வரை சிறைவாசம் மற்றும் அபராதம்

(C) fine
அபராதம்

(D) any of the above
மேற்கண்டவற்றில் ஏதேனும்

25. Kidnapping is of ———— kinds.
ஆள் கடத்துதல் ———— வகைப்படும்.

(A) two
இரண்டு

(B) three
மூன்று

(C) four
நான்கு

(D) five
ஐந்து

26. Abetment of suicide shall be punished with
தற்கொலை செய்து கொள்ள உடந்தையாக இருப்பவருக்கு பின்வரும் தண்டனை விதிக்கப்படலாம்.

(A) imprisonment upto 10 years
பத்து ஆண்டுகள் வரை சிறைவாசம்

(B) imprisonment upto 5 years
ஐந்து ஆண்டுகள் வரை சிறைவாசம்

(C) imprisonment upto 10 years and shall also be liable to fine
அபராதம் பத்து ஆண்டுகள் வரை சிறைவாசம் மற்றும் அபராதமும்

(D) fine
அபராதம்

27. Intentional insult or interruption to public servant sitting in any stage of a judicial proceeding, shall be punished with
பொது ஊழியர் ஒருவரால் நடத்தப்படும் நீதிமுறை நடவடிக்கையின் எந்த ஒரு கட்டத்திலும், உள் நோக்கத்துடன் குறுக்கிடும் எவரொருவருக்கும், பின்வரும் தண்டனை விதிக்கப்படலாம்.

(A) imprisonment upto Six months
ஆறு மாதங்கள் வரை சிறைவாசம்

(B) fine
அபராதம்

(C) imprisonment upto Six months and fine
ஆறு மாதங்கள் வரை சிறைவாசம் மற்றும் அபராதம்

(D) any of the above
மேற்கண்டவற்றில் ஏதேனும்

28. The intentional hindering of any public servant, of any sale of property offered for sale by the lawful authority, is defined as making
ஒரு சொத்தை விற்பனை செய்ய சட்டப்படி அதிகாரம் பெற்ற பொது ஊழியரால் மேற்கொள்ளப்படும் விற்பனைக்கு உள்நோக்குடன் இடையூறு ஏற்படுத்தும் செயல் ———— செய்வதாகக் கருதப்படும்.

(A) conspiracy
சதி

(B) obstruction
தடை

(C) support
ஆதரவு

(D) assistance
உதவி

29. Waging/attempting to wage/abetting waging of, war against the Government of India is liable for the punishment of
இந்திய அரசுக்கு எதிராகப் போர் தொடுக்கும், போர் தொடுக்க முயலும் அல்லது போர் தொடுக்க உடந்தையாக இருப்பவருக்கு ———— விதிக்கப்படல் வேண்டும்.

(A) death
மரண தண்டனை

(B) imprisonment for life
ஆயுள் தண்டனை

(C) imprisonment for life and also fine
ஆயுள் தண்டனை மற்றும் அபராதம்

(D) all of the above
மேற்கூறப்பட்டவை அனைத்தும்

30. While both the imprisonment and fine is awarded, imprisonment for non payment of fine shall not exceed ———— of the term of maximum imprisonment fixed for the offence.
சிறைவாசத்துடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும் நேர்வுகளில், அபராதம் செலுத்தத் தவறுவதற்கான கூடுதல் சிறைவாசத்திற்கு வரம்பு, அத்தகைய குற்றத்திற்கு அதிகபட்ச அளவாக நிர்ணயிக்கப்பட்ட சிறைவாசத்தில்

(A) full
முழு பங்கு

(B) half
அரை பங்கு

(C) one-fourth
கால் பங்கு

(D) three-fourth
முக்கால் பங்கு

31. The word "Electronic record" means
"மின்னணுப் பதிவுரு" என்பது

(A) as assigned in Information Technology Act 2000
தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000ல் கூறப்பட்ட பொருளைக் கொண்டது

(B) an electronic document
மின்னணு ஆவணம்

(C) submitted electronically
மின்னணு மூலம் சமர்ப்பிக்கப்படுதல்

(D) e-paper
மின்னணுக் காகிதம்

32. In all robbery, there is
அனைத்துக் கொள்ளையிலும் ———— அடங்கியுள்ளது.

(A) theft
திருட்டு

(B) either theft or extortion
திருட்டு அல்லது அச்சுறுத்திப் பறித்தல்

(C) fraud
மோசடி

(D) extortion
அச்சுறுத்திப் பறித்தல்

33. A incites a dog to spring upon Z, without Z's consent. Here, if A intends to cause injury, fear or annoyance to Z, he uses ———— to Z.
Z என்பவரது இசைவு இன்றி அவர் மேல் A என்பவர் ஒரு நாயை எவ்விப்பாயுமாறு ஏவுகிறார். இந்த நேர்வில் Z-க்கு கேடு, பயம் அல்லது தொந்தரவு செய்யும் உள் நோக்கம் A-க்கு இருந்தால் அவர் Z மீது ———— பயன்படுத்தி இருக்கிறார்.

(A) aggression
ஆக்கிரமிப்பு

(B) cruelty
கொடுமை

(C) criminal force
குற்றமுறு வன்முறை

(D) force
வலிமை

34. Culpable homicide means causes death by doing an act with the
மரணத்தை விளைவிக்கும் குற்றம் என்றால்

(A) intention of causing death
உள் நோக்கத்துடன் மரணம் விளைவித்தல்

(B) intention of causing such bodily injury, as is likely to cause death
மரணத்தை உண்டாக்க கூடிய ஒரு உடல் காயத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற உள் நோக்கத்துடன் செய்தல்

(C) knowledge that he is likely to cause death, by such act
அத்தகைய செயலால் மரணம் ஏற்படும் என அறிந்திருந்தும் செய்தல்

(D) all of the above
மேற்கூறப்பட்டவை அனைத்தும்

35. Voluntary obstruction of any person to prevent him from proceeding in any righteous direction, is described as
எத்திசையிலும் செல்ல உரிமை பெற்ற எவரையும், அத்திசையில் செல்ல விடாது தன்னிச்சையாகத் தடுத்தல் ———— எனப்படும்.

(A) wrongful restraint
முறையற்ற தடுப்பு

(B) legal confinement
சட்டப்படியான அடைப்பு

(C) wrongful confinement
முறையற்ற அடைப்பு

(D) harassment
துன்புறுத்தல்

36. Absconding to avoid service of summons shall be punished with
நேரில் ஆஜராகும் படி வழங்கப்படும் அதிகாரபூர்வமான உத்திரவை பெறுவதைத் தவிர்க்கும் பொருட்டு தலைமறைவாவதற்கு பின்வரும் தண்டனை விதிக்கப்படலாம்.

(A) simple imprisonment upto one month
ஒரு மாத மெய்க்காவல்

(B) simple imprisonment upto one year and fine upto Rs.5000/-
ஒரு மாத மெய்க்காவல் மற்றும் ரூ. 5000/- வரை அபராதம்

(C) fine upto Rs.5000/-
ரூ. 5000/- வரை அபராதம்

(D) Not an offence
குற்றமல்ல

37. Communication made in good faith to a person is not an offence by reason-even though any harm happens to him as a result, if it is made for the ———— of that person

நல்லெண்ணத்தோடு ஒருவரது தெரிவிக்கப்பட்ட செய்தி எதுவும், அதன் விளைவாக அவருக்கு தீங்கு நேரிடினும் - அது அவரது ————க்காகத் தெரிவிக்கப்படுமானால் குற்றமாகாது.

(A) disadvantage
பாதகம்

(B) benefit
நன்மை

(C) loss
நட்டம்

(D) defeat
தோல்வி

38. The fractions of terms of imprisonment for life shall be reckoned as equivalent to imprisonment for

ஆயுள் தண்டனைக்கான கால அளவு ———— சிறைவாசத்திற்கு இணையானதாகக் கணக்கிடல் வேண்டும்.

(A) life
ஆயுள் முழுவதும்

(B) 14 years
14 ஆண்டுகள்

(C) 20 years
20 ஆண்டுகள்

(D) 10 years
10 ஆண்டுகள்

39. Z's Will contains these words—"All my property be equally divided between A, B & C." A dishonestly scratches out B's name, intending that it may be believed that the whole property was left to himself and C. Is it correct that, A has committed forgery?

தமது சொத்துக்கள் A, B மற்றும் C-ஆல் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளப்பட வேண்டுமென Z என்பவரது உயிலில் எழுதப்பட்டுள்ளது. மொத்த சொத்தும் தனக்கும் C என்பவருக்கும் கிடைக்கவேண்டுமென்ற உள் நோக்கத்துடன், நேர்மையற்ற முறையில், B-ன் பெயரை A நீக்கி விடுகிறார். இதன்படி, "A" மோசடி செய்துள்ளார் என்பது சரியா?

(A) partly correct
பகுதி சரி

(B) correct
சரி

(C) wrong
தவறு

(D) none of the above
இதில் ஏதுமில்லை

40. A makes an attempt to pick the pocket of Z by thrusting his hand into Z's pocket. A fails in the attempt since Z's pocket is empty. A is ———— under Section 511 IPC.

Z-ன் பையில் தனது கையை நுழைத்து ஜேப்படி செய்ய A என்பவர் முயற்சி செய்கிறார். Z-ன் பை காலியாக இருந்ததால் அந்த முயற்சியில் A தோல்வியடைகிறார். இ.த.ச. பிரிவு 511ன் படி A என்பவர்

(A) partly guilty
பகுதி குற்றவாளி

(B) not guilty
குற்றவாளியல்ல

(C) guilty
குற்றவாளி

(D) innocent
அப்பாவி

41. The act of endangering the life or personal safety of others - rashly or negligently, shall be punished with

மனித உயிருக்கு/உடற் பாதுகாப்பிற்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய முரட்டு/கவனக்குறைவான செய்கை ———— தண்டனைக்குரியது.

(A) imprisonment upto to three months
மூன்று மாதங்கள் வரை சிறை வாசம்

(B) fine upto Rs. 250/-
ரூ. 250/-வரை அபராதம்

(C) imprisonment upto to three months and fine upto Rs. 250/-
மூன்று மாதங்கள் வரை சிறை வாசம் மற்றும் ரூ. 250/- வரை அபராதம்

(D) any of the above
மேற்கண்டவற்றில் ஏதேனும்

42. Doing of obscene activities in or near any public place, is punishable under Section ———— of IPC.

எந்தவொரு பொது இடத்தில் அல்லது பொது இடத்தின் அருகில் ஆபாச நடவடிக்கைகளில் ஈடுபடும் எவரொருவருக்கும் விதிக்கப்பட வேண்டிய தண்டனை குறித்த இ.த.ச. பிரிவு எண் ————ல் கூறப்பட்டுள்ளது.

(A) 294

(B) 299

(C) 329

(D) 299

43. Misconduct in any public place by a drunken person to cause annoyance to others shall be punished with
குடி போதையில் உள்ளவர் ஏதாவதொரு பொது இடத்தில் எவருக்கேனும் தொல்லை விளைவிக்கும் விதமாக தகாத நடத்தையில் ஈடுபடுபவருக்கு ———— தண்டனை விதிக்கப்படலாம்.

(A) Simple imprisonment upto 24 hours
24 மணி நேரம் வரை மெய்க்காவல்

(B) Simple imprisonment upto 24 hours and fine upto Rs.10/-
24 மணி நேரம் வரை மெய்க்காவல் மற்றும் ரூ. 10/- வரை அபராதம்

(C) fine upto Rs. 10/-
ரூ. 10/- வரை அபராதம்

(D) any of the above
மேற்கூறப்பட்டவற்றில் ஏதேனும்

44. With regard to the offences relating to Elections, "Bribery by Treating shall be punished with
தேர்தல் தொடர்பான குற்றங்களை பொறுத்தவரையில், உணவு, பானம், கேளிக்கை போன்றவகையில் விருந்தளிப்பதன் மூலமாக கையூட்டு அளிப்பதற்கு பின்வரும் தண்டனை விதிக்கப்படலாம்.

(A) simple imprisonment
மெய்க்காவல்

(B) Fine
அபராதம்

(C) simple imprisonment and fine
மெய்க்காவல் மற்றும் அபராதம்

(D) any of the above
மேற்கூறப்பட்டவற்றில் ஏதேனும்

45. A thing done in the exercise of the right of private defence is
தற்காப்புக்குரிமைக்கெனச் செய்யப்படும் எந்தவொரு செயலும்

(A) a violation
விதி மீறல்

(B) not an offence
குற்றமல்ல

(C) an offence
குற்றம்

(D) misdemeanor
தகாத செயல்

46. "Commutation of sentence" means ———— of sentence.
"தண்டனையை மாற்றி ஆணையிடுதல்" என்பது தண்டனையை

(A) merger
இணைத்தல்

(B) annul
ரத்து செய்தல்

(C) modification
குறைத்தல்

(D) deliberation
தீர ஆராய்தல்

47. A voluntarily burns a valuable security belonging to Z, intending to cause wrongful loss to Z. A has committed mischief. Is it true?
Z-க்கு முறையற்ற வகையில் நட்டம் உண்டாக்கும் உள் நோக்குடன் Z -க்கு சொந்தமான ஒரு காப்பீட்டை A என்பவர் தன்னிச்சையாகத் தீயிட்டுக் கொளுத்துகிறார், இதன்படி A தீங்கு செய்தவராகிறார். உண்மையா?

(A) partly true
பகுதி உண்மை

(B) true
உண்மை

(C) not true
உண்மையல்ல

(D) none of the above
மேற்கண்டவற்றில் ஏதுமில்லை

48. A cuts down a tree on Z's ground, with the intention of dishonestly taking the tree out of Z's possession without Z's consent. Here, as soon as A has severed the tree, he has committed
Z என்பவரது நிலத்திலுள்ள ஒரு மரத்தை நேர்மையற்ற முறையில் தானே எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற உள் நோக்கத்தோடு, Z-ன் ஒப்புதலின்றி, A என்பவர் வெட்டுகிறார். நிலத்திலிருந்து மரத்தைத் துண்டித்த உடனேயே A ———— குற்றம் புரிந்தவராகிறார்.

(A) robbery
கொள்ளை

(B) theft
திருட்டு

(C) dacoity
வழிப்பறி

(D) extortion
அச்சுறுத்திப் பறித்தல்

49. The punishments classified in the IPC does not include
இந்திய தண்டனைச் சட்டத்தின் படி விதிக்கப்பட வேண்டிய தண்டனைகளில் கீழ்க்கண்டவற்றில் எது சேராது?

(A) fine
அபராதம்

(B) imprisonment
சிறை வாசம்

(C) forfeiture of property
சொத்தைப் பறிமுதல் செய்தல்

(D) deportation
நாடு கடத்துதல்

50. Whoever voluntarily vitiates the atmosphere so as to make it noxious to the health of persons concerned, is liable for punishment under Section ———— IPC.
பொதுச் சுகாதாரக்கேடு ஏற்படும் வகையில், மக்களால் பயன்படுத்தப்படும் சுற்றுப்புறத்தை அசுத்தப்படுத்துவது இ.த.ச. பிரிவு ————ன்படி தண்டனைக்குரியது.

(A) 178

(B) 278

(C) 378

(D) 478

51. "Harbouring offender" means ―――――― the offender.
"குற்றம் புரிந்தவருக்குப் புகலிடம் அளித்தல்" எனில், குற்றம் புரிந்தவரை ―――――― வைத்தல்.

(A) revealing
வெளிப்படுத்தி

(B) co-opting
ஒத்துழைக்க

(C) concealing
மறைத்து

(D) coordinating
ஒருங்கிணைத்து

52. Committing an affray is
சச்சரவு செய்தல் என்பது ――――――

(A) fighting in a public place causing disturbance
பொது இடத்தில் சண்டையிட்டு இடையூறு ஏற்படுத்துதல்

(B) cruel act
கொடூரமான செயல்

(C) causing nuisance
தொந்தரவு செய்தல்

(D) creating ruckus
அமளி ஏற்படுத்துதல்

53. The Section ―――――― of IPC that deals with the act of a child above seven years and under twelve years of immature understanding, is,
ஏழு - பன்னிரண்டு வயதிற்குட்பட்ட, அறிவு முதிர்ச்சி பெறாத குழந்தைகளது செய்கை குறித்து, இ.த.ச. பிரிவு ――――――ல் கூறப்பட்டுள்ளது?

(A) 48

(B) 88

(C) 83

(D) 84

54. If several persons are engaged in the commission of a criminal act, they may be guilty of ―――――― offences by means of that act.
ஒரு குற்றச் செயலில் பல்வேறு நபர்கள் ஈடுபடும் போது, அவர்கள் ―――――― குற்றங்களை செய்ததாக கருத வேண்டும்.

(A) similar
ஒத்த

(B) same
அதே

(C) common
பொது

(D) different
வெவ்வேறு

55. Stolen Property is defined as the property, the possession whereof has been transferred by

ஒரு சொத்தானது ———————— மூலமாக மாற்றம் செய்யப்படுவதன் வாயிலாக கிடைத்திருப்பின் அது களவாடப்பட்ட சொத்து எனப்படும்.

(A) Theft
திருட்டு

(B) extortion
அச்சுறுத்திப் பறித்தல்

(C) robbery
கொள்ளை

(D) all of the above
மேற்கண்டவை அனைத்தும்

56. The fine imposed on offenders for gang rape shall be paid to the

கூட்டுக் குழுவாக கற்பழிக்கும் நேர்வுகளில் குற்றவாளிகளுக்கு விதிக்கப்படும் அபராதம் ————————க்கு செலுத்தப்பட வேண்டும்.

(A) Government
அரசு

(B) offender's family
குற்றவாளிகளது குடும்பத்திற்கு

(C) Government and victim
அரசு மற்றும் பாதிக்கப்பட்டவர்

(D) victim
பாதிக்கப்பட்டவர்

57. The kinds of Grievous hurt does not include

கொடுங்காயத்தின் வகைகளில் எது சேராது?

(A) permanent privation of the sight of either eye
ஏதாவதொரு கண்ணுக்கு நிரந்தரப் பார்வை இழப்பு

(B) a small wound
ஒரு சிறு காயம்

(C) permanent disfiguration of the head or face
தலை அல்லது முகத்தை நிரந்தரச் சிதைப்பு

(D) any hurt which endangers life
உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் வகையிலான காயம்

58. A person is guilty of a *public nuisance*, who does any act or is guilty of an illegal omission which causes.
ஒருவரது செயல் ———— ஏற்படுத்தினால் அவர் பொதுத் தொல்லை புரிந்த குற்றம் புரிந்தவராவார்.

(A) any common injury to the public
பொது மக்களுக்கு தீங்கு விளைவித்தல்

(B) any common injury to the people in the vicinity
அருகிலுள்ள மக்களுக்கு தீங்கு விளைவித்தல்

(C) injury to persons, in using any public right
பொது உரிமையைப் பயன்படுத்த நேரும் மக்களுக்கு தீங்கு விளைவித்தல்

(D) all of the above
மேற்கூறப்பட்டவை அனைத்தும்

59. Whoever intentionally gives or fabricates false evidence in a judicial proceeding shall be punished with
உள் நோக்கத்தோடு பொய் சாட்சி அளிக்கும், போலி சாட்சி உருவாக்கும் எவருக்கும், பின்வரும் தண்டனை வழங்கப்படலாம்.

(A) simple imprisonment upto seven years
ஏழாண்டு வரை மெய்க்காவல்

(B) imprisonment of either description upto seven years and shall also liable for fine Rs. 500
ஏழாண்டு வரை மெய்க்காவல் அல்லது கடுங்காவல் மற்றும் ரூ. 500 அபராதம்

(C) rigorous imprisonment upto seven years
ஏழாண்டு வரை கடுங்காவல்

(D) any of the above
மேற்கூறப்பட்டவற்றில் ஏதேனும்

60. Whoever is guilty of rioting, shall be punished with the sentence of
கலகம் விளைவிக்கும் குற்றத்தைச் செய்யும் எவரொருவருக்கும் ———— தண்டனை விதிக்கப்படலாம்.

(A) imprisonment upto two years
இரண்டு ஆண்டு வரை சிறை வாசம்

(B) fine
அபராதம்

(C) imprisonment upto two years and fine
இரண்டு ஆண்டு வரை சிறை வாசம் மற்றும் அபராதம்

(D) any one of the above
மேற்கூறப்பட்டவற்றில் ஏதாவது ஒன்று

61. The act of a child under ———— years is not an offence.
———— வயதுக்குக் கீழுள்ள குழந்தையின் செயல் குற்றமல்ல.

(A) seven
ஏழு

(B) eight
எட்டு

(C) nine
ஒன்பது

(D) ten
பத்து

62. The Section in IPC that deals with the offence of rioting is
கலகம் விளைவித்தல் இ.த.ச. பிரிவு ———— ல் குற்றம் தொடர்பாக கூறப்பட்டுள்ளது.

(A) 146

(B) 246

(C) 346

(D) 446

63. Gratification is
வெகுமதி எனப்படுவது

(A) accepting bribery
லஞ்சம் வாங்குதல்

(B) receiving award
விருது பெறுதல்

(C) getting gift
பரிசு பெறுதல்

(D) any of the above
மேற்கண்டவற்றில் ஏதேனும்

64. Minor, in the case of a male, is a person below ———— years of age.
ஆணினத்தைப் பொறுத்தவரை மைனர் என்பது ———— வயதுக்குக் கீழ் உள்ளவர்களைக் குறிக்கும்.

(A) eighteen
பதினெட்டு

(B) sixteen
பதினாறு

(C) twenty-one
இருபதொன்று

(D) twenty
இருபது

65. Abduction means
ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு சட்டத்திற்குப் புறம்பாக கொண்டு செல்லல் என்பது

(A) releasing
விடுவித்தல்

(B) host
விருந்தளித்தல்

(C) guest
விருந்தாளி

(D) kidnapping
ஆள் கடத்துதல்

66. A Collector exercising jurisdiction in a suit under Act 10 of 1859, is
1859ன் சட்டப் பிரிவு 10-ன் படி ஓர் உரிமையில் வழக்கில் அதிகார வரம்புடைய ஓர் ஆட்சியர்

(A) a Judge
ஒரு நீதிபதி

(B) Justice
நீதி

(C) not a Judge
நீதிபதியல்ல

(D) none of the above
மேற்கண்டவற்றில் ஏதுமில்லை

67. Movable property means
அசையும் சொத்து என்றால்

(A) Vehicles
வாகனங்கள்

(B) Furniture
அறைகலன்கள்

(C) any movable thing
எந்த அசையும் பொருளும்

(D) except land and things attached to the earth permanently
நிலம் மற்றும் நிரந்தரமாக பூமியோடு இணைக்கப்பட்ட பொருட்கள் தவிர பிற அனைத்தும்

68. A map, intended to be used as evidence, is a
சாட்சியாகப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள வரைபடம் ஒரு

(A) file
கோப்பு

(B) document
ஆவணம்

(C) deed
பத்திரம்

(D) data
தகவல்

69. A ———— is a law applicable only to a particular part of India.
இந்தியாவின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு மட்டுமே செயல்படுத்தப்படும் சட்டம் ———— எனப்படும்.

(A) Special Law
சிறப்புச் சட்டம்

(B) Act
சட்டம்

(C) Local law
வட்டாரச் சட்டம்

(D) Rule
விதி

70. A, a soldier, fires on a mob by the order of his superior officer, in conformity with the commands of the law. A committed
தனது உயரலுவலரது ஆணைப்படி, சட்டத்திற்குட்பட்டு, A என்னும் படைவீரர் ஒரு கூட்டத்தை நோக்கிச் சுடுகிறார். A செய்தது

(A) no offence
குற்றமல்ல

(B) a shortcoming
ஒரு குறைபாடு

(C) an offence
ஒரு குற்றம்

(D) delinquency
கடமை தவறிய செயல்

71. Act done in good faith for benefit of child or insane person, by or by consent of guardian is
குழந்தை/சித்த சுவாதீனமற்றவரது நலனுக்காக பொறுப்பாளரால்/அவரது ஒப்புதலுடன் நல்லெண்ணத்தில் செய்யப்படும் செயல்

(A) not an offence
குற்றமல்ல

(B) good
நன்மை

(C) an offence
குற்றம்

(D) Bad
தீமை

72. A instigates B to murder C. B refuses to do so. A is guilty of ———— B to commit murder.
C என்பவரைக் கொலை செய்யுமாறு B என்பவரை A என்பவர் தூண்டுகிறார். B அவ்வாறு செய்ய மறுக்கிறார். கொலை செய்ய B -க்கு ———— இருக்கும் குற்றத்தை A செய்துள்ளார்.

(A) backing
பின்புலமாக

(B) supporting
ஆதரவாக

(C) helping
உதவிகரமாக

(D) betting
உடந்தையாக

73. Concealing, intentionally, the commission of any offence punishable with imprisonment, is
தண்டனைக்குரிய குற்றம் நடைபெறும் தகவலை, உள் நோக்கத்தோடு வெளியே தெரிவிக்காது மறைத்து வைத்தல்

(A) appreciable
பாராட்டுக்குரியது

(B) punishable
தண்டனைக்குரியது

(C) pardonable
மன்னிக்கப்படத்தக்கது

(D) condemnable
கண்டிக்கத்தக்கது

74. Personating a public servant is liable for punishment as per Section ———— IPC

ஒரு பொது ஊழியரைப் போன்று ஆள் மாறாட்டம் செய்தல் இ.த.ச. பிரிவு ————ன்படி தண்டனைக்குரியதாகும்.

(A) 170 (B) 270

(C) 370 (D) 470

75. Omission to produce any document to a Court by whoever legally bound to produce, is punishable with

சட்டப்படி ஏதாவதொரு ஆவணத்தை, நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கக் கட்டுப்பட்டவர், உள்நோக்கத்துடன் ஒப்படைக்காமல் இருப்பின் ———— தண்டனை விதிக்கலாம்.

(A) imprisonment upto 6 months
ஆறு மாதங்கள் வரை சிறை

(B) fine upto Rs. 1,000/-
ரூ. 1,000/- வரை அபராதம்

(C) imprisonment upto 6 months and fine upto Rs. 1000/-
ஆறு மாதங்கள் வரை சிறை மற்றும் ரூ. 1,000/- வரை அபராதம்

(D) any of the above
மேற்கூறப்பட்ட எதுவும்

76. The person who states that, he believes or knows a thing which he does not believe or know respectively, is punishable for giving

தனக்குத் தெரிந்தவற்றைத் தெரியாது என்பதும், தெரியாததைத் தெரியும் என்று கூறுவதும் ———— அளித்தமைக்கான தண்டனைக்குரியது.

(A) statement
வாக்குமூலம்

(B) witness
சாட்சியம்

(C) false evidence
பொய் சான்று

(D) evidence
சான்று

77. Making false claim in Court, fraudulently or dishonestly, shall be punished with
மோசடியாகவோ, நேர்மையற்ற முறையிலோ நீதிமன்றத்தில் பொய்யான பாத்தியதை கோருதலுக்கு ———— தண்டனை விதிக்கலாம்.

(A) imprisonment upto 2 years
இரண்டாண்டு வரை சிறை

(B) fine
அபராதம்

(C) imprisonment upto one year
ஓராண்டு வரை சிறை

(D) imprisonment upto two years, and shall also be liable to fine
இரண்டாண்டு வரை சிறையுடன் மேலும் அபராதமும்

78. Causing disturbance, voluntarily, to any assembly lawfully engaged in the performance of religious worship, shall be punished with
சட்டப்படி மத வழிபாடு செய்யக் கூடியுள்ள கூட்டத்தில், தன்னிச்சையாக, இடையூறு விளைவிப்பவருக்கு ———— தண்டனை விதிக்கலாம்.

(A) imprisonment upto one year
ஓராண்டு வரை சிறை

(B) fine
அபராதம்

(C) imprisonment upto one year and fine
ஓராண்டு வரை சிறை மற்றும் அபராதம்

(D) any of the above
மேற்கண்டவற்றில் ஏதேனும்

79. Dowry Death and the punishments to be imposed for committing it is defined in Section ———— IPC.
வரதட்சணை மரணம் மற்றும் அதை விளைவிப்பவருக்கு விதிக்கப்பட வேண்டிய தண்டனை இ.த.ச. பிரிவு ————ல் விவரிக்கப்பட்டுள்ளது.

(A) 304B
(B) 324B
(C) 344B
(D) 364B

80. A, for the purpose of inducing B to resist from prosecuting a civil suit, threatens to burn B's house. A is guilty of

ஒரு உரிமை வழக்கை நடத்துவதைத் தவிர்க்குமாறு B என்பவரை தூண்டி விடும் பொருட்டு, B -ன் வீட்டை எரித்து விடுவதாக A அச்சுறுத்துகிறார். இங்கு A ———— செய்துள்ளார்.

(A) threatening
அச்சுறுத்தல்

(B) criminal intimidation
குற்றமுறு மிரட்டல்

(C) frightening
பயப்படுத்துதல்

(D) persecuting
இடர் படுத்துதல்

81. Court of Justice denote
நீதிமன்றம் என்பது

(A) Judge
ஒரு நீதிபதி

(B) Magistrate
நீதிமன்ற நடுவர்

(C) Body of judges
நீதிபதிகள் அடங்கிய குழு

(D) All of them
இவை அனைத்தும்

82. The word "Will" denotes
உயில் என்பது

(A) document
ஆவணம்

(B) paper
தாள்

(C) certificate
சான்றிதழ்

(D) testamentry documents
இறுதி விருப்ப சான்றிதழ்

83. Which section in I.P.C. deals with the act of a person of unsound mind?
மனநிலை தவறியவர் செய்யக்கூடிய செயல் எந்த கீழ்கண்ட இந்திய தண்டனை சட்டப் பிரிவின் கீழ் வருகிறது?

(A) 297

(B) 310

(C) 56

(D) 84

84. Under Sec 45 of the Indian penal code, life denotes
இந்திய தண்டனை சட்டம் பிரிவு 45ல் வரையறுக்கப்பட்டுள்ள ஆயுள் என்பது கீழ்க்கண்டவற்றைக் குறிக்கும்.

(A) Life of an Animal
விலங்கின் உயிரைக் குறிக்கும்

(B) Life of a human being
மனித உயிரைக் குறிக்கும்

(C) Both (A) and (B)
(A) மற்றும் (B) இரண்டையும் குறிக்கும்

(D) None of the above
மேற்கண்ட எதுவுமில்லை

85. "Unlawful compulsory labour" is dealt with under which Section ———— of IPC.
சட்டத்திற்கு புறம்பான கட்டாய உழைப்பு வழங்குதல் கீழ்க்கண்ட இந்திய தண்டனை சட்டப்பிரிவின் படி குற்றம்

(A) 447
(B) 348
(C) 277
(D) 374

86. Abettor is a person
குற்றச் செயலுக்கு ஆதரவளிப்பவர் என்பவர்

(A) who commits the offence
குற்றம் செய்பவர்

(B) who instigates the commission of offence
குற்றம் செயலைத் தூண்டுபவர்

(C) Against whom the offence is committed
குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்

(D) Who is innocent
அப்பாவி நபர்

87. For an unlawful assembly under section 141 of Indian penal code, the minimum number of persons required is
இந்திய தண்டனை சட்டப்பிரிவு 141ல் வரையறுக்கப்பட்டுள்ளபடி சட்ட விரோதமாக கூட்டம் கூடுதல் என்பதற்கு குறைந்தபட்சம் ———— நபர்கள் தேவை?

(A) five
ஐந்து

(B) seven
ஏழு

(C) ten
பத்து

(D) twenty
இருபது

88. Causing disappearance of evidence of offence (or) giving false information to screen the offender is an offence under section ———— of the Indian penal code.

இந்திய தண்டனை சட்டம் பிரிவு ————ன் படி சான்றுகளை மறைத்தல் அல்லது எதிரியை காப்பாற்றும் நோக்குடன் தவறான தகவல்களை அளித்தல் குற்றமாகும்.

(A) 200
(B) 201
(C) 202
(D) 203

89. Grevious hurt has been defined under section ———— of the Indian penal code.

இந்திய தண்டனை சட்டப்பிரிவு ————ல் கொடுங்காலம் எனப்து என்னவென்று வரையறுக்கப்பட்டது?

(A) 320
(B) 321
(C) 322
(D) 323

90. 'R' threatens 'S' and induces him to a sign a blank cheque and takes it "R" is guilty of

ஆர் என்பவர் எஸ் என்பவரை அச்சுறுத்தி, வெற்று காசோலையில் கையொப்பம் பெற்று எடுத்து சென்றுவிட்டார். ஆர் கீழ்க்கண்ட குற்றம் கருதப்படுவார்.

(A) Theft
திருட்டு
(B) Robbery
வழிப்பறி
(C) Extortion
வலுக்கட்டாயமாக
(D) Attempt to commit extortion
வலுக்கட்டாயமாக அடைய

91. 'T' inserts his hand into the pocket of "O" only to find the pocket to be empty, is guilty of

டி என்பவர் ஒ என்பவரது பாக்கெட்டில் கைவிட்டதில் பாக்கெட் காலியாக இருந்தது. டி என்பவர் கீழ்க்கண்ட குற்றம் செய்தவராகக் கருதப்படுவார்.

(A) Attempt to commit theft
திருட முயற்சித்தது

(B) No offence as the pocket was empty
பாக்கெட் காலியாக இருந்ததால் குற்றம் அல்ல

(C) Theft
திருட்டு குற்றம்

(D) Mischief
குறும்புத்தனம்

92. The involvement of five or more persons is essential for

ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள், கீழ்க்கண்ட செயலை செய்வதற்கு தேவை

(A) dacoity
கொள்ளை

(B) extortion
வலுக்கட்டாயமாக அடைதல்

(C) robbery
வழிப்பறி

(D) theft
திருட்டு

93. The result of successful prosecution is

ஒரு வழக்கில் அரசு தரப்பு வெற்றிகரமாக சொல்லப்பட்டால் அதன் முடிவு கீழ்க்கண்ட ஒன்றாக இருக்கும்.

(A) Conviction of the accused
எதிரி தண்டனைப்படுவார்

(B) The acquintal of the accused
எதிரி விடுதலை செய்யபடுவார்

(C) The discharge of the accused
எதிரி விடுவிக்கப்படுவார்

(D) None of the above
மேற்கண்ட எதுவும் இல்லை

94. The proof of insanity lies on the
ஒரு நபரின் பித்துபிடித்த மனநிலையை நிரூபிக்க வேண்டிய கடமை யாருக்கு உள்ளது?

(A) Prosecution
அரசு தரப்பு

(B) Accused
எதிரி

(C) Parents
பெற்றோர்

(D) Medical officer
எதிரியை பரிசோதனை செய்யும் மருத்துவர்

95. Permanent disfiguration on the head or face is an offence of
முகத்தில் (அ) தலையில் நிலையான தழும்பேற்படுத்துதல்

(A) Assault
தாக்குதல்

(B) Grievous hurt
கொடுங்காயம்

(C) Murder
கொலை

(D) None of the above
மேற்கண்ட எதுவுமில்லை

96. Defamation can be by
மானக்கேடு அல்லது அவதூறு என்பது

(A) words spoken (or) intended to be read
பேசப்பட்ட சொற்களாகவோ (அ) குறியீடுகளாக இருக்கலாம்

(B) By signs
முடியாததாகவோ இருக்கலாம்

(C) By visible representations
பார்க்கக் கூடிய படங்கள் அல்லது சிலைகள் ஆக இருக்கலாம்

(D) any one of the above
மேற்கண்ட ஏதாவது ஒன்றாக இருக்கலாம்

97. Grave and sudden provocation is
ஆழ்ந்த மற்றும் திடீர் சினமூட்டல் என்பது

(A) question of law
சட்டம் சார்ந்த வினா

(B) question of fact
உண்மை சார்ந்த வினா

(C) mixed question of fact and law
சட்டம் மற்றும் உண்மை சார்ந்த வினா

(D) none of the above
மேற்கண்ட எதுவுமில்லை

98. Which section of Indian penal code describes Adultery?
இந்திய தண்டனை சட்டத்தின் ———————பிரிவு முறை பிறழ்ந்த புணர்ச்சி விவரிக்கிறது.

(A) 495

(B) 497

(C) 498

(D) 503

99. The Indian penal code section 498A deals with what
இந்திய தண்டனை சட்டப் பிரிவு 498A எதைப் பற்றி விவரிக்கிறது.

(A) Husband or relative of husband of a woman subjecting her to cruelty
பெண்ணின் கணவர் அல்லது கணவரின் உறவினர்கள் பெண்ணை கொடுமைபடுத்துதல்

(B) Defamation
அவதூறு

(C) Criminal Intimidation
குற்றமுறு மிரட்டல்

(D) of attempts to criminal offences
குற்றங்கள் செய்வதற்கான முயற்சிகள் பற்றி

100. 'A' makes an attempt to seal some jewels by breaking open a box and finds after so opening the box, that there is no jewel init. He has done an act towards the commission of theft and therefore is guilty under ——————— Sec. of IPC.
'அ' ஒரு பொருளை உடைத்துத் திறந்து சில நகைகளைத் திருட முயற்சி செய்கிறார். அந்தப் பெட்டியை அவ்விதம் திறந்த பின்பு அதில் நகை ஏதும் இல்லை என்று காண்கிறார். திருட்டைச் செய்வதற்காக அவர் ஒரு செயலை செய்திருக்கிறார். ஆகையால் ——————— பிரிவின் படி குற்றம் செய்தவராகிறார்.

(A) Sec. 511
பிரிவு 511

(B) Sec. 420
பிரிவு 420

(C) Sec. 510
பிரிவு 510

(D) Sec. 379
பிரிவு 379